# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு மற்றும் பணிகள் என்பனவற்றின் பெறுபேறுகள்

முக்கிய விடயங்கள்:


## தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2021 செத்தெம்பரில் விரிவடைந்தன

**தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், 2021 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 9.2 சுட்டெண் புள்ளிகளால் அதிகரித்து 2021 செத்தெம்பரில் 54.3 ஆக மீளத்திரும்பியது.** புதிய கட்டளைகள் மற்றும் தொழில்நிலை துணைச் சுட்டெண்களில் அவதானிக்கப்பட்ட குறிப்பிடத்தக மேம்பாடுகள் இவ்வதிகரிப்பிற்குப் பிரதான காரணமாக அமைந்தன.

புதிய கட்டளைகளில் அதிகரிப்பு, குறிப்பாக புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள், உணவு மற்றும் குடிபானத் துறைகள் தயாரிப்பில் அதிகரிப்பு, கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணின் ஒட்டுமொத்த மேம்பாட்டிற்கு கணிசமாக பங்களித்துள்ளது. முக்கிய ஏற்றுமதி அடைவிடங்களில் பொருளாதாரங்கள் இயல்புநிலையடைந்தமை மூலம் செத்தெம்பரில் பாரிய எண்ணிக்கையிலான ஏற்றுமதிக் கட்டளைகளை தாம் பெற்றுக்கொண்டதாக புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் துறையைச் சேர்ந்த சில பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். உலகளாவிய நோய்த்தொற்று படிப்படியாகக் குறைவடைந்தமையுடன் ஆட்சேர்ப்புக்களை மீளத்தொடங்கிய விசேடமாக புடவைகள் மற்றும் அணியும் ஆடை தயாரிப்புத் துறையில் புதிய தொழில்நிலையும் அதிகரித்துள்ளது.

**தயாரிப்பு கொ.மு.சு சுட்டெண் பெறுமதி**
**54.3**

2021 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 9.2 சுட்டெண் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பு



மூலம்: இலங்கை மத்திய வங்கி

| மாறி | ஓகத் | செத் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **45.1** | **54.3** | **+** | **வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு** |
| | | கொ.மு.சு. துணைச்சுட்டெண்கள் | | |
| புதிய கட்டளைகள் | 42.6 | 55.5 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு |
| உற்பத்தி | 37.8 | 49.0 | + | சுருக்கமடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 44.1 | 53.5 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு |
| கொள்வனவுகளின் இருப்பு | 43.1 | 49.0 | + | சுருக்கமடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 64.9 | 65.0 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

எனினும், 2021 செத்தெம்பர் காலப்பகுதியில் உற்பத்தி, கொள்வனவுகளின் இருப்பும் சிறிதளவு சுருக்கத்துடன் நடுநிலையான மட்டத்திற்கு அண்மித்துக் காணப்பட்டன. மூலப்பொருட்கள் குறைவாகக் கிடைக்கப்பெறுகின்றமையின் காரணத்தினால் தொழிற்சாலைத் தொழிற்பாடுகளின் வேகத்தைத் தாம் குறைக்கவேண்டியிருந்ததாக உணவு மற்றும் குடிபானத் துறை தயாரிப்பு துறையிலுள்ள பதிலிறுப்பாளர்கள் சுட்டிக்காட்டினர். மேலும், இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் செலவில் தொடர்ச்சியான அதிகரிப்பு குறிப்பாக உலகளாவிய சரக்கு விலைகள் உயர்வடைந்தமையும் முக்கிய கரிசனையொன்றாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அதேவேளை, நிரம்பலர் விநியோக நேரம் 2021 செத்தெம்பரில் நீட்சியடைந்தது.

உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார நிலைமைகளில் மேலும் மேம்பாடுகளை எதிர்பார்த்து அடுத்துவருகின்ற மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் உயர்வான மட்டங்களில் காணப்பட்டன.

### *உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சு 2021 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 2021 செத்தெம்பரில் 54.1 ஆக மாற்றமின்றிக் காணப்பட்டது.

இந்தியாவின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் உயர்வான வீதத்தில் மேம்பட்ட அதேவேளை, ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளின் தயாரிப்பு கொ.மு.சுட்டெண்கள் மெதுவான வேகத்தில் அதிகரித்தன. அதேவேளை, சீனாவின் தயாரித்தல் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் நடுநிலையான மட்டத்தில் காணப்பட்ட அதேவேளை ரஷ்யாவின் கொ.மு.சுட்டெண் மெதுவான வேகத்தில் வீழ்ச்சியடைந்தது.

*மூலம்: மார்க்கிட்[1], 2021 ஒத்தோபர் 14இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**பணிகள் கொ.மு.சுட்டெண், 2021 ஓகத்தில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியின் பின்னர் 2021 செத்தெம்பரில் 52.2 இனைக் கொண்ட சுட்டெண் பெறுமதியினை அறிக்கையிட்டு வளர்ச்சி பாதையில் நுழைந்தது.** இதற்கு, புதிய வியாபாரங்கள், நிலுவையிலுள்ள பணிகள் மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் துணைச் சுட்டெண்களில் அதிகரிப்புக்கள் துணையளித்தன.

பிரதானமாக, சரக்கு அனுப்புதலுடன் பிரத்தியேகமாகத் தொடர்புபட்ட போக்குவரத்து, நிதியியல் பணிகள், கல்வி மற்றும் தொலைத்தொடர்பு துணைத் துறைகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளுடன் புதிய வியாபாரங்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் செத்தெம்பரில் அதிகரித்தன.

சரக்கு அனுப்புகையினால் பிரத்தியேகமாகத் தூண்டப்பட்ட போக்குவரத்து வியாபாரச் செயற்பாடுகள், கல்வி மற்றும் காப்புறுதித் துணை துறைகள் செத்தெம்பர் காலப்பகுதியில் மேம்பாடுகளைக் காண்பித்தன. எவ்வாறாயினும், ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள், மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், மனித நல நடவடிக்கைகள் மற்றும் தங்குமிடம், உணவு மற்றும் குடிபானத் துணைத் துறைகளிலுள்ள வியாபார நடவடிக்கைகள் மாதமுழுவதும் விதிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் ஊரடங்கு காரணமாக பாரியளவில் பாதிக்கப்பட்டன. எனவே, வியாபார நடவடிக்கை துணைச் சுட்டெண் செத்தெம்பரில் முன்னோக்கி நகர்ந்தது. இருந்தபோதிலும், தொடர்ந்தும் அடிப்படை அளவு மட்டத்திற்கு கீழ் காணப்பட்டது.

ஒப்பீட்டு ரீதியாக குறைவான புதிய ஆட்சேர்ப்பு மட்டத்திற்கு மத்தியில் ஓய்வுபெறுதல்கள் மற்றும் சுயாதீனமாகப் பதவி விலகுதல் என்பன மூலம் தொழில்நிலை துணைச் சுட்டெண் எதிர்மறையான பகுதியிலேயே தொடர்ந்தும் காணப்பட்டது. அதேவேளை, நீண்ட பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் ஊழியர்கள் மத்தியில் கொவிட்-19 தொற்றுக்கள் என்பவற்றுக்கு மத்தியில் மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர்கள் பணிக்கு அறிக்கையிட்டமையினால் நிலுவையில் உள்ள பணிகள் செத்தெம்பரில் தொடர்ந்தும் அதிகரித்தது.

| மாறி | ஓகத் | செத் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **46.2** | **52.2** | **+** | **வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 40.2 | 54.0 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு |
| தொழில் நடவடிக்கை | 35.3 | 46.5 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 47.5 | 40.3 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 60.8 | 54.8 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 47.1 | 65.6 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

பயணக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தல் மற்றும் உள்நாட்டில் கொவிட்-19 நோயாளர்கள்,வீழ்ச்சி என்பவற்றைத் தொடர்ந்து அடுத்த மூன்று மாதங்களுக்கான வியாபார நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் செத்தெம்பரில் அதிகரித்தது. எதுஎவ்வாறிருப்பினும், இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மற்றும் உள்ளீட்டுச் செலவுகளில் அதிகரிப்பு என்பவற்றினால் வியாபாரத் தொழிற்பாடுகள் மீதான பாதகமான தாக்கம் தொடர்பில் சில பதிலிறுப்பாளர்கள் தொடர்ச்சியாக தமது கரிசனைகளை வெளியிட்டனர்.

**பணிகள்**
**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**52.2**

2021 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 6.0 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு*

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, 2021 ஓகத்தில் 52.8 இலிருந்து 2021 செத்தெம்பரில் 53.4 ஆக உயர்வடைந்து உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளின் மேலும் அதிகரிப்பினை சமிக்ஞைப்படுத்துகின்றது.

ஐக்கிய அமெரிக்கா, சீனா, இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2021 செத்தெம்பரில் அவற்றின் பணிகள் துறைகள் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டிய அதேவேளை, யப்பானின் கொ.மு.சுட்டெண் சீர்குலைவொன்றினைக் காண்பித்தது.

*(மூலம்: மார்க்கிட்[1], ஒத்தோபர் 14, 2021 இல் உள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உ.ற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.